## இந்தியா ஆபத்தான கரங்களில் சிக்கி உள்ள நிலையில் 2026–இல் நாம் பெறப்போகும் வெற்றி,

# தமிழ்நாட்டுக்கான வெற்றி மட்டும் அல்ல, ஒட்டுமொத்த இந்தியாவுக்கான வெற்றி!

### சென்னையில் நடைபெற்ற தி.மு.கழக செயற்குழுக் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

சென்னை,டிச.24-

**சென்னை, அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கத்தில், தி.மு.கழகத்தின் செயற்குழுக் கூட்டம் கழகத்தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக அணிகளின் சார்பில், தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று, எழுச்சிமிகு உரையாற்றினார்.**

**அபோது அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

சரியாக 15 மாதங்கள்

மிக முக்கியமான நேரத்தில், இந்தச் செயற்குழுக் கூட்டம், இங்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு, இன்னும் சரியாக 15 மாதங்கள்தான் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் தலைமையில், இதுவரை கழகம் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றியை மட்டுமே நாம் பெற்று இருக்கிறோம்.

நம் `திராவிட மாடல் அரசு' திட்டங்களால், தமிழ்நாட்டு மக்கள் மாபெரும் வெற்றிகளைக் கழகத்திற்கும், நம் தலைவர் அவர்களுக்கும், நம் கூட்டணிக்கும் தொடர்ந்து கொடுத்து வருகிறார்கள்.

குறிப்பாக, எப்போதும் இல்லாத அளவிற்குக் கழகத்திற்கு மகளிர் தங்களின் ஆதரவைத் தொடர்ந்து கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த வெற்றி தொடர வேண்டும் என்றுதான் தமிழ்நாட்டிலேயே முதல் இயக்கமாகத் தேர்தல் பணிகளை நாம் தொடங்கி இருக்கிறோம்.

**40 க்கு 40 தொகுதிகள் வெற்றி**

மக்களவைத் தேர்தலில் 40 க்கு 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றவுடன் அடுத்த நொடியே, நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் 2026-ஆம் ஆண்டுத் தேர்தலுக்கான பணிகளைத் தொடங்கிவிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுபயணம் செய்து, கழகத்தின் நிர்வாகிகளைச் சந்தித்துத் தேர்தல் பணிகள் பற்றித் தொடர்ந்து ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

முதலமைச்சரின் உத்தரவை ஏற்று, நானும் தமிழ்நாடு முழுக்கப் பயணித்து, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சார்பு அணிகளைச் சந்தித்து அவர்களுடன் கலந்தாலோசனையில் ஈடுபட்டு வந்துக்கொண்டு இருக்கிறேன்.

**தொகுதிப் பார்வையாளர்கள்**

களத்தில் பணியாற்றுவதற்காக, சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்களையும் நம் தலைவர் அவர்கள் நியமித்திருக்கிறார். இங்கு வருகை தந்துள்ள உங்களில் பலர், இன்று தொகுதிப் பார்வையாளர்களாகக் களத்தில் பணிகளைச் செய்துகொண்டு இருக்கிறீர்கள்.




இளைஞர் அணியைப் பொறுத்தவரை தலைவர் அவர்களின் உத்தரவின்படி, கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தொகுதி தோறும் கலைஞர் நூலகங்களைத் திறந்து வருகிறோம். இதுவரை, தமிழ்நாட்டில் உள்ள 96 சட்டமன்றத் தொகுதிகளில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்து இருக்கிறோம் என்று கூறுவதில் நான் பெருமை அடைகிறேன்.

இந்த நூலகத்தின் வாயிலாகப் புதிய இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் கழகத்தை நோக்கி வருவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறோம்.

**இல்லந்தோறும் இளைஞர் அணி**

`இல்லந்தோறும் இளைஞர் அணி' மூலம் ஒவ்வொரு வீடாகச் சென்று இளைஞர்களைக் கழகத்தில் இணைத்துகொள்வதற்கான முயற்சியில், நாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, சட்டமன்றத் தொகுதிதோறும் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தி முடித்திருக்கிறோம். அடுத்து, ஒன்றிய அளவிலும் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்த, நாங்கள் ஈடுபட இருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, கலைஞர் நூற்றாண்டில் `கலைஞர்-100 பேச்சுப்போட்டி'யை நடத்தி, 182 இளம் பேச்சாளர்களை அடையாளம் கண்டு, தலைமையிடம் ஒப்படைத்து இருக்கிறோம்.

நாம் களத்தில் உழைப்பது போல, சமூக வலைத்தளத்திலும் உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதன்படி, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இளைஞர் அணி முன்னெடுத்த `என் உயிரினும் மேலான பேச்சுப்போட்டி'யில் 182 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து நம் தலைவர் அவர்களே அவர்களைப் பாராட்டி பரிசு கொடுத்தார்.

அந்தப் போட்டியை நடத்த உதவிய அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், நடுவர்கள், பேச்சாளர்கள் இவர்களை ஒருங்கிணைத்த மாநில துணைச் செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் உள்ளிட்ட இளைஞர் அணி அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**182 பேச்சாளர்கள்**

அண்ணன் திண்டுக்கல் ஐ.லியோனி பேசும்போது குறிப்பிட்டார். இளம் பேச்சாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்று. ஜனவரி இரண்டாவது வாரம், அதாவது பொங்கலுக்குப் பிறகு 182 பேச்சாளர்களையும் சென்னைக்கு வரவழைத்து, இரண்டு நாட்கள் இங்கேயே தங்க வைத்து, அவர்களுக்குப் பயிற்சியையும் கொடுக்க இருக்கிறோம்.

இளைஞர் அணி சார்பாக, சட்டமன்றத் தொகுதி வாரியாக, பாகத்திற்கு ஒரு இளைஞரைத் தேர்வு செய்து அதற்கான சமூக வலைத்தளப் பயிற்சியையும் இளைஞர் அணி செய்துகொண்டு இருக்கிறது.

ஒவ்வொரு அணியும் இதுபோல, பல்வேறு பணிகளைச் செய்து வருகின்றன. அதனை இன்னும் அதிகம் வேகப்படுத்த வேண்டும்.

நாம் முடிந்த மக்களவைத் தேர்தலில், கணக்கெடுத்துப் பார்த்தோம் என்றால், 221 சட்டமன்றத் தொதிகளில் வெற்றிபெற்று இருக்கிறோம். நம் பலம் நம் முதலமைச்சர் அவர்களும், அவர் கொண்டுவந்த திட்டங்களும், கழக உடன்பிறப்புகளாகிய நீங்களும்தான்.

**திரும்பிப் பார்க்கிறது**

இந்தியாவிலேயே வேறு எந்தவொரு அரசியல் தலைவருக்கும் இல்லாத வகையில், ஒரு `பவுர்புல் கரீஸ்மேட்டிக் லீடர்' ஆக நம் தலைவர் அவர்களை ஒட்டுமொத்த இந்தியாவும் இன்றைக்குத் திரும்பிப் பார்க்கிறது. அந்த அளவுக்கு, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு, தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டு இருக்கிறார். பல்வேறு நலத்திட்டங்களைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

எனவே, நம் முதலமைச்சர், தலைவர் அவர்களை மீண்டும் நாம் முதலமைச்சர் நாற்காலியில் அமர்த்தியாக வேண்டும். அதற்கு இன்றிலிருந்து நாம் ஒவ்வொருவரும் உழைத்திட வேண்டும்.

ஒவ்வொரு வீடாக ஏறி, இறங்கி கழக அரசின் திட்டங்களை மக்களிடம் இன்னும் வேகமாக எடுத்துச் செல்லவேண்டும்.

ஒவ்வொரு பூத்திலும் உள்ள வாக்குகளை நீங்கள் கண்ணும், கருத்துமாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். இந்தத் தெருவுக்கு நான் பொறுப்பு. இந்த 20 ஓட்டுக்கு நான் பொறுப்பு, பத்து வீடுகளில் உள்ள வாக்குகளுக்கு நான் பொறுப்பு என்று வாக்குகளை, பொறுப்புகளை நீங்கள் பிரித்துக்கொள்ள வேண்டும்.

**மீண்டும் வெற்றிக் கூட்டணி**

நம்மைக் குறை சொல்வதற்கு எதுவும் இல்லாமல், நம் கூட்டணி உடையாதா? மக்களிடம் நம் செல்வாக்கை எப்படிக் குறைக்கலாம் என்று என்னென்னவோ செய்துகொண்டும் யோசித்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

நம் கூட்டணி நாளுக்கு, நாள் வலிமையாகிக் கொண்டே போகிறது. நம் தலைவர் நிச்சயமாக மீண்டும் வெற்றிக் கூட்டணியைக் கண்டிப்பாக அமைப்பார். நம் மீது மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை நாளுக்கு, நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. அதற்குக் காரணம் மக்களுக்காக நாம் களத்தில் இறங்கி வேலை செய்வதுதான். எனவே, 2026- நாம் வெல்லப்போவது உறுதி என்ற உணர்வோடு செயல்பட வேண்டும்.

**இந்தியாவுக்கான வெற்றி**

இன்றைக்கு இந்தியா ஆபத்தான கரங்களில் சிக்கிக்கொண்டு இருக்கிறது. 2026-ல் நாம் பெறப்போகின்ற வெற்றி தமிழ்நாட்டுக்கு மட்டுமான வெற்றி அல்ல, ஒட்டுமொத்த இந்தியாவுக்கான வெற்றி என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். மாவட்டச் செயலாளர்கள் எல்லாம் வந்து இருக்கிறீர்கள். எங்கள் அணிகளை எல்லாம், இன்னும் அதிகமாக நீங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

`கழகம் வெற்றி பெற்று உயரே பறக்க, கழகத்தின் ஒவ்வொரு அணியும் சிறகாக இருப்போம்' என்று கூறிக்கொள்கிறேன். சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்ல வேண்டும்' என்று தலைவர் அவர்கள் நமக்கு, இலக்கு கொடுத்து இருக்கிறார்.

ஆங்கிலத்தில், `Leave no Stone Unturned' சொல்வார்கள். அதாவது, `எந்தக் கல்லையும் விட்டு விடாதீர்கள்' என்பார்கள். அதுபோல எந்த வாய்ப்பையும் விட்டுவிடாமல், 2026-ல் 200 இல்லை 200-க்கும் மேல் வெற்றியைப் பெற்று நம் தலைவர் அவர்களின் கரங்களில் சமர்ப்பிப்போம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சிமிகு உரையாற்றினார்.

---

### மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில்

## பெரம்பலூரில் இனமானப் பேராசிரியர் 102 ஆவது பிறந்தநாள் விழா!

### எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. முன்னிலையில்! திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை!

பெரம்பலூர், டிச. 24-

இனமானப் பேராசிரியர் அவர்களின் 102 ஆவது பிறந்தநாள் விழா, பெரம்பலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உருவப்படத்திற்கு, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச்செல்விராஜேந்திரன், அழகு.நீலமேகம், ஏ.எம். கே.கரிகாலன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல் ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ண மூர்த்தி, எம்.ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணைத் தலைவர் எம்.ரெங்கராஜ், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர், லெப்பைகாடு பேரூர் கழக செயலாளர் ஏ.எம்.ஜாஹிர்உசேன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி (எ) அப்துல்பாரூக், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க. கமல், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் தம்பை.தர்மராஜ், மாவட்ட கலை இலக்கிய பேரவை துணை அமைப்பாளர் ந.முத்துச்செல்வம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளரும் , துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் கருங்கல்பாளையம் பகுதி கழக செயலாளர் குறிஞ்சி என்.தண்டபாணி தலைமையில் மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி செந்தில்குமார் ஏற்பாட்டில் கேபிள் செந்தில்குமார் வரவேற்பில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி 8 ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம், மாநகர கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், வட்டக் கழக செயலாளர் கே.டி.மகேஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

---

### ஆரூர் மணிவண்ணன் ஏற்பாட்டில்! ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமை!திருமருகல் தெற்கு ஒன்றியம்

## பில்லாளியில் துணை முதல்வர் பிறந்த நாள் - கொடி ஏற்று விழா!

### மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் ஏற்றி வைத்தார்!

நாகை, டிச. 24-

நாகை மாவட்டம் திருமருகல் தெற்கு ஒன்றியம் பில்லாளியில் மாவட்ட துணைச் செயலாளர் ஆரூர் மணிவண்ணன் ஏற்பாட்டில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கொடி ஏற்று விழா நடைபெற்றது.

விழாவிற்கு திருமருகல் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.டி.எஸ்.சரவணன் தலைமை தாங்கினார்.

மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆரூர்மணிவண்ணன் முன்னிலை வகித்தார்.

கிளை செயலாளர் சரவணன் வரவேற்றார்.

விழாவில் கழக கொடியை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என். கௌதமன் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

விழாவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி, ஒன்றிய துணைச் செயலாளர் துரையரசன், ஒன்றிய பொருளாளர் கலியமூர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர்கள் பாண்டியன், உத்திராபதி, சுந்தராஜன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாடாளுமன்றதில் சட்ட மேதை அம்பேத்கர் அவர்களையும் அவரின் பெயர் உச்சரிப்பவர்களை இழிவு படுத்தும் விதமாக பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து உடுமலை நகர கழகத்தின் சார்பில் மத்திய பேருந்து நிலையம் முன்பு நகர செயலாளர் செ.வேலுச்சாமி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்சிஸ் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், ம.தி.மு.க, தமிழக வாழ்வுரிமை கட்சி, மனித நேய மக்கள் கட்சி, கொங்கு நாடு கட்சி, பெரியார் திராவிட கழகம், திராவிட கழகம், ஆதி தமிழர் பேரவை, IUML, எம்.ஜி.ஆர்.மக்கள் இயக்கம் அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட, நகர, வார்டு கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.